ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ வாலிமாவலத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

**ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்**

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வாலிமாவலத்து ॥

## திருப்பிருதி

‡வாலிமா வலத்தொருவனதுடல்கெட⋆
வரி சிலை வளைவித்து⋆ அன்று
ஏலம் நாறு தண் தடம் பொழில் இடம்பெற⋆
இருந்தநல் இமயத்துள்⋆
ஆலி மாமுகில் அதிர்தர அருவரை⋆
அகடுற முகடேறி⋆
பீலிமா மயில் நடம் செயும் தடஞ்சுனைப்⋆
பிருதி சென்றடை நெஞ்சே (1)

கலங்க மாக் கடல் அரிகுலம் பணி செய்ய⋆
அருவரை அணைகட்டி⋆
இலங்கை மா நகர் பொடி செய்த அடிகள் தாம்⋆
இருந்தநல் இமயத்து⋆
விலங்கல் போல்வன விறலிரும் சினத்தன⋆
வேழங்கள் துயர்கூர⋆
பிலம் கொள் வாள் எயிற்றரி அவை திரிதரு⋆
பிருதி சென்றடை நெஞ்சே (2)

துடிகொள் நுண் இடை சுரி குழல் துளங்கெயிற்று⋆
இளங்கொடி திறத்து⋆ ஆயர்
இடிகொள் வெம் குரல் இனவிடை அடர்த்தவன்⋆
இருந்த நல் இமயத்து⋆
கடிகொள் வேங்கையின் நறுமலர் அமளியின்⋆
மணி அறைமிசை வேழம்⋆
பிடியினோடு வண்டிசை சொலத் துயில்கொளும்⋆
பிருதி சென்றடை நெஞ்சே (3)

மறம்கொள் ஆள் அரி உரு என வெருவர⋆
 ஒருவனதகல் மார்வம்
திறந்து⋆ வானவர் மணி முடி பணிதர⋆
 இருந்த நல் இமயத்துள்⋆
இறங்கி ஏனங்கள் வளைமருப்பிடந்திடக்⋆
 கிடந்தருகெரி வீசும்⋆
பிறங்கு மாமணி அருவியொடிழிதரு⋆
 பிருதி சென்றடை நெஞ்சே (4)

கரைசெய் மாக் கடல் கிடந்தவன்⋆ கனை கழல்
 அமரர்கள் தொழுதேத்த⋆
அரை செய் மேகலை அலர்மகள் அவளொடும்⋆
 அமர்ந்தநல் இமயத்து⋆
வரைசெய் மாக் களிறிளவெதிர் வளர்முளை⋆
 அளைமிகு தேன் தோய்த்து⋆
பிரச வாரி தன் இளம் பிடிக்கருள் செயும்⋆
 பிருதி சென்றடை நெஞ்சே (5)

பணங்கள் ஆயிரம் உடைய நல் அரவணைப்
 பள்ளி கொள்⋆ பரமா என்று⋆
இணங்கி வானவர் மணிமுடி பணிதர⋆
 இருந்த நல் இமயத்து⋆
மணம் கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற⋆
 நிமிர்ந்தவை முகில் பற்றி⋆
பிணங்கு பூம் பொழில் நுழைந்து வண்டிசை சொலும்⋆
 பிருதி சென்றடை நெஞ்சே (6)

கார் கொள் வேங்கைகள் கனவரை தழுவிய⋆
 கறி வளர் கொடி துன்னிப்⋆
போர் கொள் வேங்கைகள் புனவரை தழுவிய⋆
 பூம் பொழில் இமயத்துள்⋆
ஏர் கொள் பூஞ்சுனைத் தடம் படிந்து இனமலர்⋆
 எட்டும் இட்டிமையோர்கள்⋆

பேர்கள் ஆயிரம் பரவி நின்று அடி தொழும்⋆
    பிருதி சென்றடை நெஞ்சே (7)

இரவு கூர்ந்திருள் பெருகிய வரைமுழை⋆
    இரும் பசி அது கூர⋆
அரவம் ஆவிக்கும் அகன் பொழில் தழுவிய⋆
    அருவரை இமயத்து⋆
பரமன் ஆதி எம்பணி முகில் வண்ணன் என்று⋆
    எண்ணி நின்றிமையோர்கள்⋆
பிரமனோடு சென்றடி தொழும் பெருந் தகைப்⋆
    பிருதி சென்றடை நெஞ்சே (8)

ஓதி ஆயிர நாமங்கள் உணர்ந்தவர்க்கு⋆
    உறு துயர் அடையாமல்⋆
ஏதம் இன்றி நின்றருளும் நம் பெருந் தகை⋆
    இருந்த நல் இமயத்து⋆
தாது மல்கிய பிண்டி விண்டலர்கின்ற⋆
    தழல் புரை எழில் நோக்கி⋆
பேதை வண்டுகள் எரி என வெருவரு⋆
    பிருதி சென்றடை நெஞ்சே (9)

‡கரிய மா முகில் படலங்கள் கிடந்து⋆ அவை
    முழங்கிட⋆ களிறென்று
பெரிய மாசுணம் வரை எனப் பெயர் தரு⋆
    பிருதி எம் பெருமானை⋆
வரிகொள் வண்டறை பைம் பொழில் மங்கையர்⋆
    கலியனதொலி மாலை⋆
அரிய இன் இசை பாடும் நல் அடியவர்க்கு⋆
    அருவினை அடையாவே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥